முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.ஜி.அசோக் பிரசாத், B.A., B.L., M.S.E.N.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2026 ம் வருடம் பிப்ரவரி மாதம் 03 ம் நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 – விசுவாவசு வருடம் - தை திங்கள் 20 ம் நாள்)
இடைநிலை மனு எண்.20/2025
அசல் வழக்கு எண்.774/2015
CNR.No.TNED02-001076-2015

1. செல்வராஜ்
2. பெரியசாமி @ நடராஜ்
3. சின்ன பாப்பாயி (இறப்பு) ..மனுதாரர்கள்/வாதிகள்

// எதிர் //

1. கௌந்தசாமி (இறப்பு)
2. சாமியாத்தாள்
3. சின்னம்மாள்
4. வசந்தி
5. அருக்காணி
6. குப்புசாமி (இறப்பு)
7. சண்முகம்
8. ஆர்.பழனிசாமி
9. துளசியம்மாள் (இறப்பு)
10. ராமசாமி
11. அண்ணபூரணி @ பாப்பாத்தி
12. கோபால்
13. பாப்பாயி (இறப்பு) ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

14. கே.பாவத்தாள்
15. கே.ஈஸ்வரமூர்த்தி

..எதிர்மனுதாரர்கள்/6 ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள்

16. ரவி @ சண்முகம்
17. ஜெயலட்சுமி @ கண்ணாயாள்

..எதிர்மனுதாரர்கள்/9 ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள்

20.06.2025 தேதியிட்ட இம்மனு காலவரையறைச் சட்டம் பிரிவு 5ன்படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு, இறந்து போன 6ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்ட 2313 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக் கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 30.01.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.பி.எஸ்.தாமோதரன், வழக்கறிஞர் அவர்களும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 7, 8, 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப்பட்டும், 1, 6, 9 மற்றும் 13 எதிர்மனுதாரர் இறந்துவிட்டதாலும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:-

## <u>உத்தரவு</u>

இறந்து போன 6ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்ட 2313 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு உரையின் சுருக்கம் பின்வருமாறு</u>:

3. மனுதாரர் இந்த மனுவில் 2வது மனுதாரர் என்றும், மேற்படி தாவாவில் 2வது வாதி என்றும், மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தீர்ப்பாணையை ரத்து செய்யவும், பாகப்பிரிவினை, தனிச்சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருப்பதாகவும், 6ம் பிரதிவாதி குப்புசாமி கடந்த 06.09.2018ம் தேதி 14வது எதிர்மனுதாரர் கே.பாவாத்தாள் மற்றும் 15வது எதிர்மனுதாரர் கே.ஈஸ்வரமூர்த்தி ஆகியோர்களை

வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், 9ம் பிரதிவாதி துளசியம்மாள் கடந்த 05.07.2023ம் தேதி 16வது எதிர்மனுதாரரான தனது மகனான ரவி @ சண்முகம் மற்றும் மகளான 17வது எதிர்மனுதாரர் ஜெயலட்சுமி @ கண்ணாயாள் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், 9வது பிரதிவாதியின் கணவரான தங்கமுத்து கடந்த 25.08.2016ம் தேதி இறந்துவிட்டதால் 9வது பிரதிவாதி துளசியம்மாளின் வாரிசுகள் 16 மற்றும் 17 எதிர்மனுதாரர்கள் மட்டும் தான் என்றும், மேற்படி எதிர்மனுதாரர்கள் இறந்தவர்கள் பற்றி தகவல் தெரிவிக்காததால் அவர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்றும், மேற்படி காலதாமதம் வேண்டுமென்றோ அஜாக்கிரதையாகவோ ஏற்படவில்லை என்றும், எனவே, 2313 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இறந்துபோன 6வது பிரதிவாதியின் வாரிசுகளான 14 மற்றும் 15 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க உத்தரவிட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

4. <u>5வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் அதன் சுருக்கம்:-</u>

5. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களால் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

6. 6 மற்றும் 9வது பிரதிவாதி இறந்தது பற்றி மனுதாரர்களுக்கு முதலே தெரிந்திருந்தும் வேண்டுமென்ற எந்த நடவடிக்கையும் குறிப்பிட்ட நேரத்தில் எடுக்காமல் இருந்துள்ளார் என்றும், அதிமான கால தாமதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், இந்த மனு வேண்டுமென்றே காலதாமதம் செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

7. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

8. <u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>

9. மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தீர்ப்பாணையை ரத்து செய்யவும், பாகப்பிரிவினை, தனிச்சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருப்பதாகவும், 6 ம் பிரதிவாதி குப்புசாமி கடந்த 06.09.2018 ம் தேதி 14 வது எதிர்மனுதாரர் கே.பாவாத்தாள் மற்றும் 15 வது எதிர்மனுதாரர் கே.ஈஸ்வரமூர்த்தி ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், 9 ம் பிரதிவாதி துளசியம்மாள் கடந்த 05.07.2023 ம் தேதி 16 வது எதிர்மனுதாரரான தனது மகனான ரவி @ சண்முகம் மற்றும் மகளான 17 வது எதிர்மனுதாரர் ஜெயலட்சுமி @ கண்ணாயாள் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், 9 வது பிரதிவாதியின் கணவரான தங்கமுத்து கடந்த 25.08.2016 ம் தேதி இறந்துவிட்டதால் 9 வது பிரதிவாதி துளசியம்மாளின் வாரிசுகள் 16 மற்றும் 17 எதிர்மனுதாரர்கள் மட்டும் தான் என்றும், மேற்படி எதிர்மனுதாரர்கள் இறந்தவர்கள் பற்றி தகவல் தெரிவிக்காததால் அவர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்றும், மேற்படி காலதாமதம் வேண்டுமென்றோ அஜாக்கிரதையாகவோ ஏற்படவில்லை என்றும், எனவே, 2313 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இறந்துபோன 6 வது பிரதிவாதியின் வாரிசுகளான 14 மற்றும் 15 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க உத்தரவிட வேண்டுமென்று வாதிடப்பட்டுள்ளது.

10. எதிர்மனுதாரர்கள் தரப்பில், 6 மற்றும் 9 வது பிரதிவாதி இறந்தது பற்றி மனுதாரர்களுக்கு முதலே தெரிந்திருந்தும் வேண்டுமென்ற எந்த நடவடிக்கையும் குறிப்பிட்ட நேரத்தில்

எடுக்காமல் இருந்துள்ளார் என்றும், அதிமான கால தாமதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், இந்த மனு வேண்டுமென்றே காலதாமதம் செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது.

11. மனு மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில்,6 ம் பிரதிவாதி குப்புசாமி கடந்த 06.09.2018 ம் தேதி 14 வது எதிர்மனுதாரர் கே.பாவாத்தாள் மற்றும் 15 வது எதிர்மனுதாரர் கே.ஈஸ்வரமூர்த்தி ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாக கூறப்பட்டுள்ளதை பொருத்தும், 6 மற்றும் 9 வது பிரதிவாதி இறந்தது பற்றி மனுதாரர்களுக்கு முதலே தெரிந்திருந்தும் வேண்டுமென்ற எந்த நடவடிக்கையும் குறிப்பிட்ட நேரத்தில் எடுக்காமல் இருந்துள்ளார் என்றும், அதிமான கால தாமதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறியுள்ளதை பொருத்தும், அசல் வழக்கானது தீர்ப்பாணையை ரத்து செய்யவும், பாகப்பிரிவினை, தனிச்சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டும் அசல் வழக்கில் முழுமையான தீர்வு காணும் வகையிலும் பல்வகை நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும் மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பளித்து நிபந்தனையின் பேரில் தீர்வு காண்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக,

மனுதாரர்கள், 2 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகையாக ரூ.1500/-ஐ வரும் 10.02.2026 ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறினால் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 10.02.2026.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு

சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் வருடம் பிப்ரவரி மாதம் 03ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

G ASHOK PRASATH Digitally signed by G ASHOK PRASATH

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,

ஈரோடு.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>

(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை...)

G ASHOK PRASATH Digitally signed by G ASHOK PRASATH

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,

ஈரோடு.

அசல்/வரைவு உத்தரவு
இ.ம.எண்.20/2025
அ.வ.எண்.774/2015
நாள் 03.02.2026
மு.கூ.சா.நீ.ம., ஈரோடு.